செ.வெ.எண்: 55 நாள்: 21.11.2016

## பொது மக்கள் அனைவரும் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி கொள்ள வேண்டும்- மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.

----

புதுக்கோட்டை மாவட்ட மைய நூலகத்தில் மாவட்ட மைய நூலகம் மற்றும் மைய நூலக வாசகர் வட்டம் இணைந்து நடத்திய 49 வது தேசிய நூலக வார விழா மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ.ராமசாமி அவர்கள் தலைமையில் 20.11.2016 அன்று நடைபெற்றது.

இவ்விழாவில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் அவர்கள் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி கூறியதாவது.

புத்தகம் ஒரு மனிதனை நல்வழிப்படுத்தும். நூலகங்களில் உள்ள பல்வேறு புத்தகங்களை பொது மக்கள் படிப்பதன் மூலம் தங்களது அறிவுத்திறனை மேம்படுத்த உதவுகிறது. இதன்படி பொது மக்களிடையே நூலகங்களுக்கு செல்லும் முக்கியதுவத்தை உணர்த்தம் வகையில் மாவட்ட மைய நூலகம் மற்றும் மைய நூலக வாசகர் வட்டம் இணைந்து 49-வது தேசிய நூலக வார விழா துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் நூலகங்களில் சுயமுன்னேற்றம், தத்துவம், தமிழ்மொழி, நாடகம், நிர்வாகம், நீதிக்கதைகள், பக்தி நூல்கள், பயணக்கட்டுரை உள்ளிட்ட பல்வேறு வகையான தகவல்கள் அடங்கிய நூல்கள் இடம்பெற்றுள்ளது. எனவே வாசகர்கள் அனைவரும் தங்களது அறிவுத்திறனை வளர்த்து வாழ்வில் முன்னேறும் வகையில் நூலகங்களில் புத்தகங்களை படித்து பயன்பெற வேண்டும் என்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் கூறினார்.

இதில் நூல்கள் கண்காட்சியினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து கூறியதாவது.

நூல்கள் வாசிக்கும் பழக்கம் மனிதனை பக்குவப்படுத்தும் இதன் மூலம் மனிதருக்கு அறிவாற்றல் வளர்வதுடன், மன பக்குவத்தை ஏற்படுத்தும். இதன்படி பொது மக்களிடையே நூலகங்களுக்கு செல்லும் முக்கியதுவத்தை உணர்த்தம் வகையிலும், மக்களிடையே புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தினை உருவாக்கிட விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் மாவட்ட மைய நூலகம் மற்றும் மைய நூலக வாசகர் வட்டம் இணைந்து 49-வது தேசிய நூலக வார விழா துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த கண்காட்சியில் வரலாறு, விளையாட்டு, பௌதிகம், விவசாயம் வேலைவாய்ப்பு, வர்த்தகம், அறிவியல், பொதுஅறிவு, மருத்துவம், யோகா உள்ளிட்ட பல்வேறு பயனுள்ள நூல்கள் இடம்பெற்றுள்ளது. எனவே அனைத்து வாசகர்களும் இத்தகைய நூல்களை படித்து பயன் பெறுவதுடன் தங்களை நல்வழிப்படுத்த பொது மக்கள் அனைவரும் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இ.ஏ.ரெத்தினசபாபதி (அறந்தாங்கி), திரு.பா.ஆறுமுகம் (கந்தர்வக்கோட்டை), முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, அர்பன் கூட்டுறவு பண்டகசாலைத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், மாவட்ட நூலக அலுவலர் திரு. எம்.கார்த்திகேயன், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் திரு.பாஸ்கர், நூலகர் பா.முத்து மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**